1994 மே 4]

முற்பகல் 10-15

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே சாலைகள் நல்லமுறையிலே இருக்கின்றன. ஏற்கெனவே ஆய்வுகள் எல்லாம் செய்யப்பட்டு, நிலுவையிலே இருக்கிறது. ஆகவே அந்த ஆய்வை வேகப்படுத்தி, உடனடியாகப் பேருந்து வசதி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆய்வை விரைவுபடுத்த வேண்டிய அவசியமே இல்லை. 30 அல்லது 35 கிலோ மீட்டருக்குள்ளே அடங்கியிருக்குமானால், நகரப் பேருந்துகளை விரைவாகவே அங்கே இயக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 506, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

506—

மானாமதுரையில் உள்ள துணை கைத்தறி இயக்குநர் அலுவலகத்தைப் பரமக்குடிக்கு மாற்றுதல்.

*10948—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், மானாமதுரையில் உள்ள துணை கைத்தறி இயக்குநர் அலுவலகத்தை பரமக்குடிக்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், மானாமதுரையிலிருந்த கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர் அலுவலகம் பரமக்குடிக்கு மாற்றப்பட்டு விட்டது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மானாமதுரையில் இயங்கி வந்த துணை கைத்தறி இயக்குநர் அலுவலகத்தை அந்தப் பகுதியில், நெசவாளர்கள் அதிகமாக உள்ள பரமக்குடிக்கு மாற்றித்

[1994 மே 4

தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும், கைத்தறித் துறை இயக்குநர் அவர்களுக்கும் இந்தச் சமயத்தில் நன்றியைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பகுதியில், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடியில் அதிகமான கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். இந்த நெசவாளர்களுடைய கோரிக்கையை ஏற்று துணை கைத்தறி இயக்குநர் அலுவலகத்தை மாற்றிக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அங்கே நூல் வங்கி ஒன்றை ஏற்படுத்தித் தருவதற்கு நடவடிக்கை எடுத்து, ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'யார்ன் பேங்க்' அந்தப் பகுதியில் உருவாக்குவதற்குத் தகுந்த சாத்தியக் கூறுகள் இருக்குமேயானால், அதை ஆராய்ந்து, நிதி நிலைமைக்கு ஏற்ப அந்த 'யார்ன் பேங்கை' அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் அதிகமான புதுமைகளைச் செய்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் கைத்தறித் துறையிலும் புதுமைகளைப் புகுத்துவதற்கு நெசவாளர்கள் பயிற்சி மையம் ஒன்றினை பரமக்குடி துணை கைத்தறி இயக்குநர் அலுவலகத்தில் அமைப்பதற்கும் மற்றும் தரமான டையிங் யூனிட் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்து ஆரம்பித்துக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ட்ரெயினிங் சென்டர் மற்றும் குவாலிட்டி டையிங் யூனிட் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, அந்தப் பகுதியில் அதற்குத் தேவையான நெசவாளர்கள் இருக்கிறார்களா, அதற்குத் தேவையான நிதி நிலைமை இருக்கிறதா என்பதை ஆராய்ந்த பிறகு, அத்தகைய சாத்தியக் கூறுகள் இருக்குமேயானால் தக்க நடவடிக்கைகள் துறையின் மூலமாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: **வினா எண் 507,** திருமதி கவிநிலவு தர்மராஜ், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. வி. கே. **சின்னசாமி, மாண்புமிகு** பொதுப்பணித் துறை **அமைச்சர்.**